MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on 13.11.2018 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 387 | **பொருள் எண்.1**<br><br>இந்நகராட்சி உரக்கிடங்கில் புதிதாக FSTP செப்டேஜ் மேனேஜ்மெண்ட் அமைக்க ரூ.217.00இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதன் மீது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26888/2018/UGSS–2 நாள்.12.11.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டின்மீது தலைமைப்பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதியை பெற மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br><br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 388 | **பொருள் எண்.2**<br><br>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018–19–ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34ற்கான விவாதத்தின் போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு எண்.14–ல் ''மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Machine) நிறுவப்படும்'' என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.<br>அதன் பேரில் மேலூர் நகராட்சியில் உள்ள 27 வார்டுகளில் 27 தானியங்கும் குடிநீர் மையங்கள் தனியார் தொழில் நிறுவனங்களுடன் / தொழில் முனைவோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று செயல்படுத்தவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.486.00 இலட்சத்திற்கும் மற்றும் இப்பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பி வைத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on 30.11.2018 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 389 | **பொருள் எண்.1**<br><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான சிவன்கோவில், மலம்பட்டி, வெங்கடேஷ் நகர், மற்றும் மில்கேட் பகுதிகளில் அமைந்துள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளில் கேட் வால்வு, அதற்குரிய குடிநீர்குழாய் சாமான்கள் மற்றும் பகிர்மானக்குழாய் அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.1.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1.அனுமதிக்கலாம்.<br>2. அவசரஅவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று நகராட்சி விதிகள் 15ன் கீழ் உள்ளூர் நிறுவனங்களில் பொருட்கள் வாங்கி பணி செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 390 | **பொருள் எண்.2**<br><br>இந்நகராட்சியில் கட்டிட வரைவாளராக உரிமம் வழங்குமாறு கீழ்க்கண்ட நபர்கள் உரிய கல்விசான்று, அனுபவம் சான்றுகளுடன் விண்ணப்பித்துள்ளார்.<br><br>1. திரு.எம்.சேக்முகமது அஜாருதீன்,<br>70சி, ஆர்.சி.சர்ச் ரோடு,<br>மேலூர்.<br>2. திரு.ந.சையது மஸ்தான்அலி<br>16ஏ, கஸ்தூரிபாய் நகர்,<br>காந்திஜி பூங்கா ரோடு,<br>மேலூர். | கட்டிட வரைவாளராக உரிமம் வழங்கி பதிவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 3. திரு.கே.துரைப்பாண்டி<br>த/பெ எஸ்.காசிவிஸ்வநாதன்,<br>மல்லிகை நகர்,மேலூர்<br><br>மேற்கண்ட நபர்களுக்கு சான்றிதழ்களின் அடிப்படையில் இந்நகராட்சியில் கட்டிட வரைவாளராக உரிமம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(கோப்பு எண்.2515/2018/எப்1) | |
| 391 | **பொருள் எண்.3**<br><br>இந்நகராட்சியில் 01.06.1988 முதல் 31.05.1989 வரை துப்புரவு அலுவலராக பணியாற்றிய திரு.எஸ்.கோவிந்தன் என்பவர் மேற்கண்ட பணிகாலத்தில் தனது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகைக்கு வட்டி5 ,வது ஊதியக்குழு நிலுவைக்கு வட்டி மற்றும் சிறப்பு சேமநலநிதி தொகைக்கு வட்டி ஆகியன வழங்க கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை1 வது பிரதிவாதியாகவும் ,இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை சென்னை அவர்களை2 வது பிரதிவாதியாகவும் ,மற்றும ஆணையாளர் மேலூர் நகரர்டசி3 வது பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.No7099/2016 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை வழக்கிலிருந்து நீக்கம் செய்ய எதிர்வாதுரை தாக்கல் செய்ய நகராட்சி சார்பாக உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன்முத்தையா அவர்களை வழக்கறிஞராக நியமனம் செய்தும் மற்றும் வழக்கு கட்டணமாக ரூ.5000/– வழங்க ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 392 | **பொருள் எண்.4**<br><br>மேலூர் நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள உணவு விடுதியை வி.பாண்டுரெங்கன் என்பவர் உரிமம் பெற்று 34 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவித்து வருவதை ரத்து செய்து பொது ஏலம் விடக்கோரி திரு.ஏ.பி.இளங்கோ என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD).No 23224/2018ன்படி நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன்முத்தையா அவர்கள் ஆஜராகவும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.9,500/– அன்னாருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2768/2018/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| 393 | **பொருள் எண்.5**<br><br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான மில்கேட் சமுதாயக் கூடத்தை திரு.ஆர்.இளங்கோ த/பெ இராமையா என்பவருக்கு மாத வாடகைக்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மூன்றாண்டு குத்தகைக்கு விட வேண்டியதை மாத வாடகைக்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் உடனடியாக சமுதாயக் கூடத்தை காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைக்கக் கோரியதை எதிர்த்து மேற்படி உரிமதாரர் திரு.ஆர்.இளங்கோ என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD).No 23724/2018ன்படி நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன்முத்தையா அவர்கள் ஆஜராகவும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500 அவருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2617/2018/அ2) | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 394 | **பொருள் எண்.6**<br><br>பொதுசுகாதாரப்பிரிவில் அன்றாடம் பயன்படுத்தப்பட்டு வரும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் மற்றும் பிளீச்சிங் பவுடர் இருப்பு குறைவாக உள்ளது. தொடர்ந்து மழைபெய்து வருவதாலும், எதிர் வரும் காலம் மழைக்காலம் என்பதாலும் மாநில அளவில் டெங்குகாய்ச்சல் பரவி வருவதாலும் தடுப்பு நடவடிக்கைகளுக்காக கிருமிநாசினிகள் போதிய அளவில் இருப்பில் வைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே கீழ்க்காணும் விபரப்படி கிருமிநாசினிகளை அரசு சார்ந்த திருச்சி மல்ட்டிபர்பஸ் கூட்டுறவு அங்காடியிலிருந்து வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>நீர்த்த சுண்ணாம்புத்தூள் – 10000 கிலோ<br>பிளீச்சிங்பவுடர் – 2000 கிலோ<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருச்சி மல்ட்டிபர்பஸ் கூட்டுறவு அங்காடியிலிருந்து வாங்கவும், தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 395 | **பொருள் எண்.7**<br><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆரம்பப் பள்ளிகளில் 6x4, 8x4, 2x2.5 அளவுகளில் Ceramic Coated Steel class Board அமைக்கும் பணிக்கு ஆரம்பக் கல்விநிதியில் ரூ.9.90 இலட்சத்தில் விலைப்புள்ளி கோரியமைக்கு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண். | நிறுவனப்பெயர் | தொகை | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | M/s Treasurer Envinsion | ரூ.8,72,971 | 0.05 %குறைவு |
| 2. | JMD Solution, Madurai | ரூ.8,75,047 | 0.19%அதிகம் |

| | | |
|---|---|---|
| | குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s Treasurer Envinsion நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்திற்கு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 396 | **பொருள் எண்.8**<br>இந்நகராட்சி அழகர்கோவில் சாலையில் அமைந்துள்ள நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் ஆரம்பக் கல்வி நிதியில் ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் Smart class அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.<br><table><tr><td>வ.எண்.</td><td>நிறுவனப்பெயர்</td><td>தொகை</td><td>சதவீதம்</td></tr><tr><td>1.</td><td>M/s Treasurer Envinsion</td><td>ரூ.8,53,174</td><td>0.34 %குறைவு</td></tr><tr><td>2.</td><td>M/s JMD Solution, Madurai</td><td>ரூ.8,67,674</td><td>1.36%அதிகம்</td></tr></table>மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s Treasurer Envinsion, Madurai நிறுவனத்தை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td>397</td><td>

**பொருள் எண்.9**

இந்நகராட்சி பொறியியல்பிரிவு மற்றும் பொதுசுகாதாரப்பிரிவில உள்ள உபயோகமில்லாத பழைய இரும்பு , தகரச்சாமான்களை ஏலத்தில் விட பொதுஏலம் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஏலத்தாரர் பெயர் | தகரம் கிலோ 1க்கு | இரும்பு கிலோ 1க்கு |
|---|---|---|---|
| 1. | எஸ்.எம்.சரவணக்குமார், மேலூர் | ரூ.8.20 | ரூ.13.90 |
| 2. | எம்.காதர் மைதீன், மேலூர் | ரூ.9.60 | ரூ.14.80 |

மேற்கண்ட இருவரில் அதிக ஏலத்தொகை கோரியுள்ள திரு.எம்.காதர் மைதீன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>398</td><td>

**பொருள் எண்.10**

இந்நகராட்சி உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உயிர் சுரங்க முறையில் உரக்கிடங்கு அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. Shree Bommu Industries - 4.5% அதிகம்
2. Green fine Equipments - 11.11%அதிகம்

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Shree Bommu Industries நிறுவனத்தின் விலைப்புள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

</td><td>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br><br>1.அனுமதிக்கலாம்.<br><br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| 399 | **பொருள் எண்.11**<br><br>இந்நகராட்சி பணியாளர்களுக்கு சேமநலநிதியில் பிடித்தம் செய்யப்பட்ட தொகைக்கு 2016–17 மற்றும் 2017–18ஆம்ஆண்டு வரை வட்டி கணக்கீடு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள குறைந்த விலைப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கவும் அதற்கான செலவின தொகை ரூ.50000/– க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.340/2018/சி1) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 400 | **பொருள் எண்.12**<br><br>திருமதி.நாச்சம்மாள் க/பெ வேல்பாண்டி என்பவர் இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 31.12.2011 அன்று பணியிடை இறந்துவிட்டார். அன்னாரது திருமணமான மகள் திருமதி.வி.ஆனந்தவள்ளி என்பவர் தனக்கு வாரிசு வேலை வழங்க கேட்டு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD).No.16004/2017 ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு எதிர்வாதுரை தாக்கல் செய்ததற்கு உரிய வழக்கு கட்டணம் ரூ.5000/–ஐ திரு.ஜே.குணசீலன்முத்தையா உயர்நீதிமன்ற வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.2463/2018/எச்1 | |
| 401 | **பொருள் எண்.13**<br><br>பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 31.12.2011 அன்று பணியிடை இறந்த திருமதி.நாச்சம்மாள் க/பெ வேல்பாண்டி என்பவர் அரசாணை எண்.21 ந.நி.ம.கு.வ.துறை நாள்.23.02.2006 ன்படி 2006ம் ஆண்டு பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளார். அதன்படி மேற்படி இறந்த பணியாளருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க இயலாது என இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலகம், சென்னை அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி அரசாணை குறித்து தெளிவுரை கேட்கப்பட்டுள்ளதாகவும், தெளிவுரை பெறப்பட்ட பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி இறந்த பணியாளரின் கணவர் திரு.அ.வேல்பாண்டி என்பவர் குடும்ப ஓய்வூதியம் வழங்க கேட்டு உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண்.W.P.(MD).No.20029/2018 ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு ஆஜராவதற்கு வழக்கு கட்டணம் ரூ.9500 ஐ திரு.ஜே.குணசீலன்முத்தையா, உயர்நீதிமன்ற வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதி வழங்கலாம். | அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |